## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்

MCOP No.73/2023 **நாள் :19.09.2024**

மசா 1. ராபீன் ஞானதாஸ்

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் திருவில்லிபுத்தூரிலுள்ள சி எம் எஸ் மேல்நிலைப்பள்ளியில் உடற்கல்வி இயக்குனராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது மாத சம்பளம் எவ்வளவு என்றால் கிராஸ் ரூ.1,02,000/– கழிவுகள் போக ரூ.82,000/–. தற்போதும் மேற்சொன்ன சம்பளத்தை பெற்று வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றபொழுது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை சுமார் 6 மணி இருக்கும். முதல் தகவல் அறிக்கையில் விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்து சென்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் தலைகவசம் அணிந்திருந்தேன். நான் தலைகவசம் அணியாமல் இருசக்கர வாகனத்தை ஒட்டியதால் காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் திருவில்லிபுத்தூர்– சிவகாசி மெயின் ரோடு என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் திருவில்லிபுத்தூரில் கொளுர்பட்டி என்றால் சரிதான். மேற்படி சாலையில் அதிக மக்கள் நடமாட்டம் மற்றும் வாகனம் அதிகம் சென்றுவரும் என்றால் சரிதான். மேற்படி சாலை அதிகமான போக்குவரத்து சாலை என்பதால் 1ம் எதிர் மனுதாரர் வாகனமான TN 72 AW 2840 டிராக்டரும் அதனுடன் இணைந்த பதிவு செய்யப்படாத டிரைலரும் அதன் ஒட்டுநரால் கவனமாக ஒட்டி வரப்பட்டது என்றாலும் மேற்படி விபத்து டிராக்டர் ஒட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் கவனமாக இருச்ககர வாகனத்தை ஒட்டி சென்றால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றாலும் விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஒட்டுநர் தகுதியான ஒட்டுநர் உரிமம் இல்லாமல் டிராக்டர் மற்றும் டிரைலரை ஒட்டி சென்று விபத்து ஏற்படுத்தி மோட்டார் வாகன விதிகளை மீறியுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடை 1ம் எதிர்மனுதாரர்தான் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட டிராக்டருடன் இணைக்கப்பட்ட டிரைலர் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் காப்பீடு எதுவும் செய்யப்படவில்லை என்பதாலும் மோட்டார் வாகன விதிகளை மீறியுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. டிராக்டருடன் இணைக்கப்பட்ட டிரைலரை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளரால் அதன் உரிமையாளர் மீது அபராதம் விதிக்கப்பட்டு அது அவரால் செலுத்தப்பட்டள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. டிரைலரின் உரிமையாளர் வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்பதாலும் அவரை சேர்க்காததால் மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. மேற்படி டிராக்டரை விபத்திற்கு முன்பே திருவில்லிபுத்தூரை சேர்ந்த பாண்டியராஜ் என்பவர் விலைக்கு வாங்கி விட்டார் என்றாலும் பெயர் மாற்றம் செய்யப்படாமல் பழைய உரிமையார் வியகப்பன் பெயரிலே இயக்கப்பட்டது மோட்டார் வாகன விதிகளை மீறிய செயல் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால்

சாியல்ல. நான் காயப்பட்டவுடன் திருவில்லிபுத்தூா் அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை பெற்று அதன் பின்பு மதுரையிலுள்ள ப்ரீத்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சாிதான். ப்ரீத்தி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கு வழங்கப்பட்ட மசாஆ 7, 8, 9, 10 Discharge summary Duplicate தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாிதான். மேற்படி ஆவணங்களின் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சாிதான். ப்ரீத்தி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கு மெடிக்கல் இன்சூரன்ஸ் வழங்கப்பட்டது என்றால் சாிதான். மேற்படி மெடிக்கல் இன்சூரன்ஸ் மெடி அசிஸ்ட் என்ற அரசு சாா்ந்தது என்றால் சாிதான். மேற்படி மெடிக்கல் கிளைம் செய்வதற்காக அசல் பிலகள் மற்றும் Discharge summary மெடி அசிஸ்ட் நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சாிதான். நான் சிகிச்சை பெற்றதற்கான செலவு தொகை அவா்களால் செலுத்தப்பட்டது என்றால் இல்லை. ப்ரீத்தி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கு செலுத்தப்பட்ட 4 இறுதி பில்களின் அசல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சாிதான். அது மருத்துவமனையில் உள்ளது. மசாஆ 12 இறுதி பில் கிடையாது என்றாலும் அதில் மருத்துவ பாிந்துரைகள், மருத்துவ பில்கள் ஏற்றுக்கொள்ளகூடியது அல்ல என்றால் மேற்படி பில்களில் கண்ட தொகையானது இறுதி பில்லில் சோ்க்கப்படவில்லை. நான் இறுதி பில்லை தாக்கல் செய்தால் உண்மை தன்மை தொியவரும் என்றால் சாிதான். மசாஆ 12 ஆவணத்தில் கண்ட பில்கள் மற்றும் ப்ரீத்தி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான மற்ற மருத்துவ பில்களும் மெடிக்கல் கிளைம் செய்யப்பட்டுவிட்டது என்றாலும் அதன் அடிப்படையில் எனக்கு எவ்வித தொகையும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சாியல்ல. ப்ரீத்தி மருத்துவமனையின் அதிகாாிகளை விசாாித்தால் பில் சம்பந்தப்பட்ட விபரம் தொியவரும் என்றால் சாிதான். எனக்கு ஏற்பட்ட மருத்துவ செலவுகள் அனைத்தும் மெடிக்கல் கிளைம் மூலம் கிடைக்க பெற்றுவிட்டதால் 2ம் எதிா்மனுதாரா் மருத்துவ செலவிற்காக எவ்வித தொகையும் செலுத்த கடமைப்பட்டவா் இல்லை என்றால் சாியல்ல. ப்ரீத்தி மருத்துவமனையில் வழங்கப்பட்ட அசல் Discharge summary மற்றும் அசல் இறுதி பில்கள் தாக்கல் செய்யாததால் மருத்துவ செலவினங்களுக்காக 2ம் எதிா்மனுதாரா் எவ்வித தொகையும் செலுத்த கடமைப்பட்டவா் இல்லை என்றால் சாியல்ல. எனக்கு எவ்வித நிரந்திர ஊனமோ வருமான இழப்போ ஏற்படவில்லை என்றால் சாியல்ல. எனக்கு இழப்பீடு வழங்கும்பட்சத்தில் 1ம் எதிா்மனுதாரா்தான் கொடுக்க கடமைப்பட்டவா் என்றாலும் 2ம் எதிா்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சாியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of September 2024.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**